மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் நாள், வெள்ளிக்கிழமை,
அசல் வழக்கு எண்.169/2009
[CNR No:TNTT06- 000040-2009]
-----

மரிய அந்தோணியம்மாள் ...வாதி

/எதிர்/

1) முருகலட்சுமி
2) கிருஷ்ணன் (இறப்பு)
3) ரவிச்சந்திரன்
4) சரோஜா ...பிரதிவாதிகள்

(இ.ம.எண்.178/2012 மனு 02.04.2012ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் 3ம்பிரதிவாதி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)
(இ.ம.எண்.132/2020 மனு 25.02.2020ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் இறந்துபோன 2ம்பிரதிவாதியின் வாரிசாக 4ம்பிரதிவாதி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கு 20.04.2026 அன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வரப்பெற்று வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரெங்கராஜன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சுந்தரபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 2ம்பிரதிவாதி வழக்கு விசாரணையின் போது இறந்துவிட்டதாக 04.09.2019ம் தேதி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டும், 4ம்பிரதிவாதிக்கு இவ்வழக்கில் முறையாக அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 17.03.2021 அன்று தோன்றதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையில், வாதி மற்றும் 1, 3 பிரதிவாதிகள்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:05:12 +0530

தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**1)** தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்வதன் மூலம், தபசில் சொத்தை காலிசுவாதீனமாக பிரதிவாதிகள் வாதி வசம் ஒப்படைக்கும்படிக்கும், மற்றும் வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(வாதி தபசில் சொத்தை பொறுத்து ஆரம்பத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் இ.ம.எண்.544/2021 மனு 26.04.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து நீக்கிவிட்டு தபசில் சொத்தை காலிசுவாதீனமாக வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

**2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்–**

வாதியின் வளர்ப்பு தந்தையான லேட்.பூச்சன் குமாரர் வேதமுத்துக்கு பாத்தியப்பட்டு வாதியை வளர்த்து வந்து, திருமணம் செய்து வைத்து தாவா சொத்தை வாதியின் பெயருக்கு 27.08.1991ல் உயில் ஆவண எண்.44 ஆக பதிவு செய்து கொடுத்துள்ளார். வேதமுத்து 30.07.1994 அன்று வாதியை வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டதால் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து வாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார். வாதிக்கு எழுதப்படிக்க தெரியாததால் பயந்த சுயபாகம் உடையவர். 2ம்பிரதிவாதி வாதிக்கு நெருங்கிய உறவினர் வாதியின் அறியாமையை பயன்படுத்தி 2ம்பிரதிவாதி வாதியிடமிருந்து அசல் உயில் ஆவணத்தை பாதுகாக்கவும், பத்திரமாக வைத்திருப்பதாக பெற்றுக்கொண்டு ஆஸ்வதமாக வைத்து மோசடியான ஆவணம் ஒன்றை தயாரித்து தாவா சொத்தை தனக்கு பாத்தியப்பட்டதாக தப்பு பாத்தியம் கொண்டாடி

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:05:18 +0530

2009ம் வருடம் ஜூன் மாதம் முதல் வாரம் முதல் கட்டிடம் கட்டி வருகிறார். வாதி தடுத்தும் கேட்க மார்க்கமில்லாததால் பிரதிவாதிகள் ஆவணம் உற்பத்தி செய்திருந்தால் அதனை ignore செய்து, 15.06.2009ல் கோவில்பட்டி காவல்நிலையத்தில் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்து, தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**3) 2ம்பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 1ம்பிரதிவாதி ஏற்றுக்கொண்டதின் சுருக்கம்–**

பிராது சங்கதிகளை மறுத்துரைத்து, உண்மையாதெனில் தாவா சொத்தை வாதி 26.11.1996ம் தேதி 1ம்பிரதிவாதியின் கணவரும், 2ம்பிரதிவாதியின் மகனான ரவிச்சந்திரன் என்பவருக்கு ரூ.36,000/–க்கு கிரையம் பேசி சாட்சிகள் முன்பு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில் வாதியும், சாட்சிகளும் கையெழுத்து செய்துள்ளனர். பதிவு செய்து கொடுங்கள் என்று மேற்படி ரவிச்சந்திரன் வாதியிடம் கேட்டபோது வாதி பதிவு கிரையம் கொடுக்க மார்க்கமில்லை என கூறிவிட்டார். வழக்கு சொத்திற்கும், தனக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும் இடைஞ்சலும் செய்ய மாட்டேன் என்று வாதி உறுதிகூறினார். கிரையம் பெற்ற காலம் முதல் ரவிச்சந்திரன் தாவா சொத்தில் வேலி மரங்கள் வளர்த்து, குப்பை போட்டும் அனுபவித்து வந்தார். மேற்படி காலங்களில் வாதி தாவா சொத்தை பொறுத்து எவ்வித வில்லங்கமும் செய்யவில்லை. தாவா சொத்தில் ரவிச்சந்திரன் வீடு கட்டி மின்இணைப்பு பெற்று, 1, 2 பிரதிவாதிகளுடன் சுமார் 15 வருடங்களாக அனுபவித்து வருகிறார். 2ம்பிரதிவாதியிடம் வாதி தாவா சொத்தை பொறுத்து ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை. உயில் ஒன்றை பாதுகாப்பிற்காக கொடுத்தார் என்பது சுத்த பொய். 2ம்பிரதிவாதியிடம் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. வாதியின்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:05:24 +0530

வழக்கு ரவிச்சந்திரனை அவசிய கட்சிக்காரராக சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மதிப்பு குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 1 லட்சம் மதிப்பு பெறும். வழக்கு தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) 1ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்—</u>**

வாதி தபசில் சொத்தினை 27.08.1991ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள உயிலின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி உயிலானது பூச்சன் குமாரர் வேதமுத்து என்பவரது மனைவி செல்லம்மாள் என்பவரை தவிர வேறு வாரிசுகள் இல்லாத நிலையில் ஈராட்சியை சேர்ந்த குருவம்மாளின் மகளாகிய மாரிய அந்தோணியம்மாளை வேதமுத்துவின் வளர்ப்பு மகளாக பாவித்து வளர்த்து வந்து, மரிய அந்தோணியம்மாளுக்கு மேற்படி தேதியில் உயில் எழுதிக்கொடுத்துவிட்டு வேதமுத்து 30.07.1994ம் தேதி காலமாகிவிட்டார். அதற்கு பின் வாதி தன்னுடைய உறவுக்காரரான 1ம்பிரதிவாதியின் கணவரான 3ம்பிரதிவாதிக்கு வழக்கிடை சொத்தினை 26.11.1996ம் தேதி தொகை ரூ.36,000/—க்கு ஒரு பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக்கொடுத்துவிட்டு வழக்கிடை சொத்தின் அனுபவத்தினை ஒப்படைத்துவிட்டார். 1ம்பிரதிவாதியின் கணவர் வீடு கட்டுவதற்கு சுவாதீனத்தையும், வாதி உயில் ஆவணத்தையும் ஒப்படைத்துவிட்டார். வழக்கு சொத்தானது உயில் எழுதிக்கொடுத்த காலத்திலேயே வீடு கட்டுவதற்கான அஸ்திவாரம் அடித்தள மட்ட சுவர் கட்டப்பட்டுள்ளது. அந்த விவரம் பதிவு உயிலில் கிழமேல் 15 அடி தென்வடல் 62 அடி உள்ள மனை நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள அடிமட்ட சுவர் என்று எழுதப்பட்டுள்ளது. அந்த விவரத்தை கிரைய பத்திர சொத்து விவரத்திலும் கூறியுள்ளார். வாதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் உள்ள நிலையில் கட்ட இயலாத நிலையில் 3ம்பிரதிவாதிக்கு விற்று வீடு கட்டிக்கொள்ள அனுபவத்தை

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:05:35 +0530

ஒப்படைத்துவிட்டார். 3ம்பிரதிவாதி வீடு கட்டி, வீட்டு வரி, மின்இணைப்பு, குடிநீர் வரி செலுத்தி வாதிக்கு தெரிந்தே பகிரங்கமாக நிராட்சேபணையாக அனுபவம் செய்து வருகிறார். இந்த விவரம் வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் துலங்கும் என்றும், வாதியின் குடியிருப்புக்கு அருகில் தாவா சொத்தில் வாதி கூறும் பிரதிவாதிகளின் கட்டிட ஆக்கிரமிப்பு தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. சுவாதீன மீட்பு பரிகாரம் காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

<u>5) 3ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்–</u>

வாதி தபசில் சொத்தினை 27.08.1991ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள உயிலின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி உயிலானது பூச்சன் குமாரர் வேதமுத்து என்பவரது மனைவி செல்லம்மாள் என்பவரை தவிர வேறு வாரிசுகள் இல்லாத நிலையில் ஈராட்சியை சேர்ந்த குருவம்மாளின் மகளாகிய மாரிய அந்தோணியம்மாளை வேதமுத்துவின் வளர்ப்பு மகளாக பாவித்து வளர்த்து வந்து, மரிய அந்தோணியம்மாளுக்கு மேற்படி தேதியில் உயில் எழுதிக்கொடுத்துவிட்டு வேதமுத்து 30.07.1994ம் தேதி காலமாகிவிட்டார். அதற்கு பின் வாதி தன்னுடைய உறவுக்காரரான 1ம்பிரதிவாதியின் கணவரான 3ம்பிரதிவாதிக்கு வழக்கிடை சொத்தினை 26.11.1996ம் தேதி தொகை ரூ.36,000/–க்கு ஒரு பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக்கொடுத்துவிட்டு வழக்கிடை சொத்தின் அனுபவத்தினை ஒப்படைத்துவிட்டார். 1ம்பிரதிவாதியின் கணவர் வீடு கட்டுவதற்கு சுவாதீனத்தையும், வாதி உயில் ஆவணத்தையும் ஒப்படைத்துவிட்டார். வழக்கு சொத்தானது உயில் எழுதிக்கொடுத்த காலத்திலேயே வீடு கட்டுவதற்கான அஸ்திவாரம் அடித்தள மட்ட சுவர்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:05:42 +0530

கட்டப்பட்டுள்ளது. அந்த விவரம் பதிவு உயிலில் கிழமேல் 15 அடி தென்வடல் 62 அடி உள்ள மனை நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள அடிமட்ட சுவர் என்று எழுதப்பட்டுள்ளது. அந்த விவரத்தை கிரைய பத்திர சொத்து விவரத்திலும் கூறியுள்ளார். வாதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் உள்ள நிலையில் கட்ட இயலாத நிலையில் 3ம்பிரதிவாதிக்கு விற்று வீடு கட்டிக்கொள்ள அனுபவத்தை ஒப்படைத்துவிட்டார். 3ம்பிரதிவாதி வீடு கட்டி, வீட்டு வரி, மின்இணைப்பு, குடிநீர் வரி செலுத்தி வாதிக்கு தெரிந்தே பகிரங்கமாக நிராட்சேபணையாக அனுபவம் செய்து வருகிறார். இந்த விவரம் வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் துலங்கும் என்றும், வாதியின் குடியிருப்புக்கு அருகில் தாவா சொத்தில் வாதி கூறும் பிரதிவாதிகளின் கட்டிட ஆக்கிரமிப்பு தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. சுவாதீன மீட்பு பரிகாரம் காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>6) வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது–</u>**

1) தபசில் சொத்து வாதிக்கே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யப்பட வேண்டியதா?
2) **வாதி கோரியுள்ளபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கத்தக்கதா?**
3) அவசிய கட்சியை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பது சரியா?
4) தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

29.08.2022ம் தேதி 2வது எழுவினா நீக்கரவு செய்யப்பட்டு கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டது.

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:05:48 +0530

**<u>7) கூடுதல் எழுவினா–</u>**

1) தபசில் சொத்தை காலிசுவாதீனமாக ஒப்படைக்க கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

**8) இவ்வழக்கில்,** வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரைக்கு ஆதரவாக 3 ம்பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ.1 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆதரவாக சுந்தரராஜ் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வி.காமேஷ்வரன் (நகராட்சி வரி விதிப்பு வருவாய் ஆய்வாளர், கோவில்பட்டி) அவர்கள் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு நீ.ம.சா.ஆ.2, நீ.ம.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>நீதிமன்ற பரிசீலனையும், தீர்வுகளும்</u>**

**<u>9) 1 வது எழுவினா மற்றும் 1 வது கூடுதல் எழுவினாக்கான தீர்வு–</u>**

**9(1)** வாதி தாவா சொத்தை தனது வளர்ப்பு தந்தையான பூச்சன் குமாரர் வேதமுத்து வாதி பெயருக்கு 27.08.1991 ம் தேதியிட்டு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எண்.44 ன் படி எழுதி வைத்துவிட்டு வேதமுத்து 30.07.1994 ம் தேதி வாதியை வாரிசாக விட்டு விட்டு காலம் சென்றுவிட்டதால் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து, வாதி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், வாதியின் அறியாமையை பயன்படுத்தி 2 ம்பிரதிவாதி வாதியின் நெருங்கிய உறவினர் என்பதால் அசல் உயில் ஆவணத்தை பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்திருப்பதாக கூறி ஆஸ்வதப்படுத்தி மோசடியான ஆவணம் தயாரித்து 2009 ம் வருடம் ஜுன் மாதம் முதல் வாரம் முதல் தாவா சொத்தில் கட்டிடம் கட்டி

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:05:55 +0530

வருவதால் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**9(2)** 1ம்பிரதிவாதி மற்றும் 3ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையில் வாதி பிராதில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்து ஆதியில் பூச்சன் குமாரர் வேதமுத்துக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதையும், அவரது வளர்ப்பு மகனான வாதிக்கு 27.08.1991ம் தேதி உயில் ஆவணம் எழுதி வைத்துவிட்டு 30.07.1994ம் தேதி காலம் சென்றுவிட்டார் என்பதையும், வாதி தாவா சொத்தை 1ம்பிரதிவாதியின் கணவரும், 3ம்பிரதிவாதிக்கு 26.11.1996ல் ரூ.36,000/-க்கு ஒரு பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சாட்சிகள் முன்பு எழுதிக்கொடுத்துவிட்டு வழக்கு சொத்தின் அனுபவத்தை ஒப்படைத்துவிட்டார் என்றும், உயில் ஆவணத்தின் அசலையும் ஒப்படைத்துவிட்டார் என்றும், அதுமுதல் 3ம்பிரதிவாதி தாவா சொத்தில் பிரஸ்மட்டத்திற்கு மேல் வீடு கட்டி பிரதிவாதிகள் குடியிருந்து மின்இணைப்பு, வீட்டு தீர்வை, தண்ணீர் வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றும், வாதியின் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**9(3)** வாதி பிராது சங்கதிகளை சார்ந்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1 ஆக சாட்சியமளித்து 27.08.1991ம் தேதியிட்ட வேதமுத்து எழுதிவைத்த உயில் ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 30.07.1994ம் தேதியிட்ட வேதமுத்து இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணையில் **"2ம்பிரதிவாதி கிருஷ்ணன் எனது உறவினரா என்றால் தூரத்து உறவினர். அசல் உயிலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் அசல் ஆவணத்தை 2ம்பிரதிவாதி வாங்கி சென்றுவிட்டார். பிராது தபசில் சொத்து விவரத்தில் கட்டிடம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் எனது தகப்பனார்**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:06:01 +0530

**காலத்தில் சிறு சிறு வீடுகளாக 3 வீடுகள் இருந்தது. அதனை 1, 2 பிரதிவாதிகள் இடித்து சிறிய அறை கட்டினார்கள். அந்த அறை வழக்கு தாக்கல் செய்த பின்பு கட்டினார்கள். வழக்கறிஞர் ஆணையர் நியமிக்க கோரிய மனுவில் தாவா சொத்தில் கட்டிடம் உள்ளதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1996 ல் பிரதிவாதியான ரவிச்சந்திரன் என்பவருக்கு தபசில் சொத்தை சாட்சிகள் முன்னிலையில் பதியப்படாத கிரையப்பத்திரம் மூலம் ரூ.36,000/—க்கு கிரையத்தொகை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தொகை தொடர்பாக எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு நான் கூடுதல் கிரையத்தொகை கேட்டதால் எனக்கு எதிராக கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2009 ம் ஆண்டிலிருந்து தபசில் சொத்தை நான் அனுபவம் செய்து வரவில்லை என்றாலும் அவ்வாறு அனுபவம் செய்து வருவதை காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9(4)** 3 ம்பிரதிவாதி பி.சா.1 ஆக எதிர்வழக்குரைக்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்து வாதியின் வளர்ப்பு தந்தை வேதமுத்து எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அசல் பி.சா.ஆ.1 ஆகவும், 3 ம்பிரதிவாதி பெயருக்கு 2009 ம் வருடம் முதல் தாவா சொத்திற்கு செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் அசல் பி.சா.ஆ.2 ஆகவும், மின்இணைப்பு கட்டண ரசீதுகள் பி.சா.ஆ.3 ஆகவும், குடிநீர் இணைப்பு ரசீது பி.சா.ஆ.4 ஆகவும், 26.11.1996 ம் தேதியிட்டு பிராது தபசில் சொத்தை 3 ம்பிரதிவாதி பதிவு செய்யப்படாத ஆவணத்திற்கு வழக்கிடையில் உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டு பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிராது சான்றிட்ட நகல் பி.சா.ஆ.6 ஆகவும், வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரிய மனு நகல் பி.சா.ஆ.7 ஆகவும், இடைக்கால உறுத்துக்கட்டளை கோரிய மனு நகல் பி.சா.ஆ.8 ஆகவும், பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பி.சா.ஆ.9

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:06:07 +0530

ஆகவும், வேதமுத்து இறப்பு சான்றிதழ் பி.சா.ஆ.10 ஆகவும், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடம், நீ.ம.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்து சாட்சியமளித்துள்ளார். பி.சா.1 குறுக்குவிசாரணையில் **"வழக்கு சொத்து ஆதியில் பூச்சன் குமாரர் வேதமுத்துக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். வேதமுத்து அவரது வளர்ப்பு மகனான வாதிக்கு 27.08.1991ல் உயில் ஆவணம் எழுதி பதிவு செய்து வைத்துள்ளார் என்றால் சரிதான். வேதமுத்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் தபசில் சொத்து விவரத்தில் இம்மாலுக்குள் கிழமேல் 15 அடி, தென்வடல் 62 அடி உள்ள மனைநிலமும், அதில் கட்டியிருக்கிற பிரஸ்மட்ட சுவர்களும் தபசில் விவரம் சரி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.9 எதிர்வழக்குரையில் பாரா 4ல் ரவிச்சந்திரன் வாதியிடம் கேட்டபோது வாதி தபசில் சொத்தை பதிவு கிரையம் கொடுக்க மார்க்கமில்லை என்று கூறியுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வாதி, 2ம்பிரதிவாதியான எனது தகப்பனாருக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தில் நான் கட்டியுள்ள வீட்டின் கதவு எண், மின் இணைப்பு எண் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் உயில் ஆவணத்தை பாதுகாப்பாக வைத்திருக்க கொடுத்ததில் அதனை சாதகமாக கொண்டு மோசடியாக கிரைய ஆவணம் உற்பத்தி செய்து உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல. அவர்கள் உயில் ஆவணத்தை கொடுத்து நீங்கள் வீடு கட்டி துணையாக இருந்து கொள்ளுங்கள் என்று கொடுத்தார்கள். வாதிக்கு கணவரும் இல்லை, அவருடைய பெற்றோர்களும் இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9(5)** பி.சா.2 ஆக சுந்தரராஜ் என்பவர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை. பி.சா.2 முதல்விசாரணையில் **"வாதி தபசில் சொத்தில் பிரேஸ்மட்டம் போடுவதற்கு நான் தான் கொத்தனாராக**

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:06:14 +0530

**வேலை செய்தேன். வேலை நடந்து கொண்டிருந்த போது வாதி நிதி பற்றாக்குறை காரணமாக 1996 ம் வருடம் வாதியின் நெருங்கிய உறவினரான பிரதிவாதி ரவிச்சந்திரனுக்கு தபசில் சொத்தை விற்று விட்டார். பிரஸ்மட்டம் போட்டதற்கான கூலியை கூட வாதியால் கொடுக்க முடியாத சூழ்நிலையில் பிரதிவாதி தான் அதற்கான கூலியை எனக்கு கொடுத்தார்"** என்று முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.2 குறுக்குவிசாரணையில் **"சாட்சி எப்படி சொல்ல வேண்டும் என்று கூறி 3 ம்பிரதிவாதி ரவிச்சந்திரன் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண், மின் இணைப்பு எண் தெரியாது என்றால் நான் அடித்தளம் மட்டுமே நான் கட்டினேன் அதனால் எனக்கு தெரியாது"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9(6) பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி அழைப்பாணையின் பேரில் கோவில்பட்டி நகராட்சி வரி விதிப்பு வருவாய் ஆய்வாளர் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது முதல்விசாரணையில் "22.09.2009 ம் தேதியிட்டு வரி விதிப்பு எண்.52637 வரி விதிப்பவர் பெயர் ரவிச்சந்திரன், கதவு எண்.33/1, பாரதி நகர், மேட்டுத்தெரு –3, பழைய வார்டு எண்.30, அதற்குரிய ஆவணம் எங்களது அலுவலகத்தில் 27.02.2019 ம் தேதியில் புதிய நகராட்சி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டதால் பழைய அலுவலகத்தில் தேடிப்பார்த்து கிடைக்கப்பெறாததால் நகராட்சி ஆணையாளர் ந.க.எண்.1034/2026/ஆ1 கடிதம் 27.02.2026 ம் தேதியிட்டது நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முகவரிக்கு குடிநீர் இணைப்பு எண்.137/K.V.1/20–21/0008018 நகல் நீ.ம.சா.ஆ.3 ஆகவும், நீ.ம.சா.ஆ.2, நீ.ம.சா.ஆ.3 ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.1 குறுக்குவிசாரணையில் **"திரு.ரவிச்சந்திரன் பெயரில் ஏற்பட்ட சொத்து வரி அசல் கோப்பு எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரிதான். அசல் கோப்பை பார்த்தால் தான் எந்த வருடம் சொத்து வரி நிர்ணயம்**

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:06:20 +0530

**செய்யப்பட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9(7)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின் போது 3ம்பிரதிவாதி அவரது முதல்விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3ல் தாவா சொத்து வாதியின் வளர்ப்பு தந்தை பூச்சன் குமாரர் வேதமுத்துக்கு பாத்தியப்பட்டது என்பதையும், அவர் 27.08.1991ல் வாதிக்கு உயில் ஆவணம் பதிவு செய்து கொடுத்தார் என்பதையும், வேதமுத்து 30.07.1994ல் காலம் சென்றுவிட்டார் என்று வாதிக்கு தாவா சொத்தில் வா.சா.ஆ.1ன் அடிப்படையில் உரிமை கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 58ன்படி பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். பிரதிவாதி ஒப்புக்கொண்ட உயில் ஆவணம் வா.சா.ஆ.1, பி.சா.ஆ.1ஐ நிரூபிக்க வேண்டிய அவசியம் வாதிக்கு ஏற்படவில்லை என்று **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு - P.Bhavani /VS/ P.Rajeswari (Deceased) –** 2025 (6) CTC 767 – தாக்கல் செய்தும், 1, 3பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்தை பொறுத்து எதிரிடை அனுபவம் கோரப்படமாலும், எதிரிடை அனுபவத்திற்குரிய காலவரையறை சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட சட்ட காலம் வரை பிரதிவாதிகளின் தாவா சொத்தில் உள்ள அனுபவத்தை வழக்கில் நிரூபிக்கப்படாததால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்று **மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு –** Indira /VS/ Arumugam and another – (1999) AIR (SC) 1549 தாக்கல் செய்து வாதுரை செய்தும், 3ம்பிரதிவாதி தாவா சொத்தை வாதியிடமிருந்து 1996ம் ஆண்டு கிரையத்தொகை ரூ.36,000/– பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணையில் 1996ல் பிரதிவாதியான ரவிச்சந்திரன் என்பவருக்கு தபசில் சொத்தை சாட்சிகள் முன்னிலையில்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:06:26 +0530

பதியப்படாத கிரையப்பத்திரம் மூலம் ரூ.36,000/–க்கு கிரையத்தொகை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்திருப்பதால் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சாட்சிகளை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்பதால் பி.சா.ஆ.5 ஆவணம் Due execution of Ex.B5 not proved என்று **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு – Subramanian /VS/ Selvaraj (Died) on 9 March 2026** தாக்கல் செய்து வாதுரை செய்தார். பிரதிவாதி பி.சா.ஆ.5 பதிவு செய்யப்படாத ஆவணத்தை மாண்புமிகு உயர்நீதிமன்ற ரிவிஷன் உத்தரவின் படி குறைவுற்ற முத்திரைக்கட்டணம் இந்திய பதிவு சட்டம் பிரிவு 35ன் கீழ் செலுத்தப்பட்டிருந்தாலும், பி.சா.ஆ.5 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதன் Due execution நிரூபிக்கப்படாததாலும் அது பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் முத்திரைக்கட்டணம் செலுத்தினாலும், பதிவு ஆவணத்திற்குரிய தகுதியை பெறத்தக்கதல்ல. தாவா சொத்தின் உரிமையை பொறுத்து பி.சா.ஆ.5 ஆவணம் சட்டத்தால் அனுமதிக்கத்தக்க ஆவணம் அல்ல என்று **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் – M.Ahamed Jesimabanu /VS/ A.Mohamed Maideen – 2026 (1) MWN (Civil) 203, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் – Thangamuthu /VS/ A.Jeyaraj 2020 (1) CTC 47** முன்தீர்ப்பை தாக்கல் செய்து வழக்கை அனுமதிக்க வேண்டி வாதுரை செய்தார்.

**9(8)** பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து வாதியின் வளப்பு தந்தை பூச்சன் குமாரர் வேதமுத்துக்கு பாத்தியப்பட்டு, வா.சா.ஆ.1, பி.சா.ஆ.1ன்படி வாதிக்கு 1991ல் உயில் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டு, வா.சா.ஆ.2, பி.சா.ஆ.10 ஆவணத்தின் படி வேதமுத்து 1994ல் காலம் சென்ற பின்னர் உயிலின்படி வாதிக்கு கிடைக்கப்பெற்று, 1996ம் ஆண்டு பி.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை ரூ.36,000/–க்கு பதிவு

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:06:31 +0530

செய்யப்படாத கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் கொடுத்து உயில் ஆவணத்தின் அசலையும் 3ம்பிரதிவாதியிடம் ஒப்படைத்து, தாவா சொத்தின் அனுபவத்தையும் ஒப்படைத்துள்ளார். 3ம்பிரதிவாதி தாவா சொத்து பிரஸ்மட்டத்திற்கு மேல் 2009ம் ஆண்டிற்கு முன்பாகவே வீடு கட்டி 3ம்பிரதிவாதி பெயரில் வீட்டு தீர்வை, மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு பெற்று பி.சா.ஆ.2, 3, 4 ஆவணத்தின் அடிப்படையில் அனுபவம் செய்து வருவதால் அந்த விவரம் வாதி தரப்பில் வழக்கறிஞர் ஆணையர் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு பி.சா.ஆ.7 மற்றும் நீ.ம.சா.ஆ.1 வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் வீடு கட்டப்பட்டிருப்பது காண்பிக்கப்பட்டிருப்பதால் வாதி அவரது வழக்குரையில் 2009ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் வாரத்தில் வீடு கட்ட எத்தனித்து வருவதாகவும், ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1ல் 2009ம் ஆண்டு வீடு கட்டப்பட்டு இருந்து வருவதாக காண்பிக்கப்பட்டிருப்பதால் 2009ம் ஆண்டிற்கு முன்பாகவே வீடு கட்டி வாதிக்கு தெரிய குடியிருந்து வருவதால் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை பிரதிவாதிகள் மறுத்துரைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதால் வாதி தரப்பில் 3ம்பிரதிவாதி அனுமதியின் பேரில் குடியிருந்து வருவதை நிரூபிக்காததால் வாதி தாக்கல் செய்துள்ள விளம்புகை மற்றும் காலிசுவாதீனப்பரிகாரம் 1996ம் ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வாதியின் வழக்கு காலம் கடந்துவிட்டது என்றும், பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் எதிரிடை அனுபவம் கோராத நிலையிலும், வாதி தரப்பில் பிரதிவாதிகள் எந்த தேதியில் தாவா சொத்தின் அனுபவத்திற்கு வந்தார்கள் என்பதை நிரூபிக்காததால் வாதியின் வழக்கு காலவரையறை சட்டத்தினால் காலம் கடந்தது என்றும் வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று **மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு – Nazir Mohamed /VS/ J.Kamala and others – 2020 (6) CTC 320** – தாக்கல் செய்து

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:06:38 +0530

வாதுரை செய்தார். வாதி அசல் வழக்குரையில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்து, பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் தாவா சொத்து உரிமையை மறுத்துரைத்து தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருவதை எதிர்வழக்குரையில் கூறிய பின்னர் 2022ம் ஆண்டு அசல் வழக்கில் விளம்புகை மற்றும் காலிசுவாதீன பரிகாரம் கோரி சீர்திருத்தம் செய்யப்பட்டிருப்பதால் வாதி, பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள அனுபவம் வாதியின் அனுமதியின் பேரில் குடியிருந்து வருவதை நிரூபிக்க தவறியுள்ளதால் பிரதிவாதிகள் தரப்பில் எதிரிடை அனுபவம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு –** Lakshminarayanan /VS/ Family Manager V.Suriyanarayanan – 2021 (2) CTC 431 – தாக்கல் செய்து வாதுரை செய்தார். மேலும் பிரதிவாதி தரப்பில் கூட்டுரிமையாளர்களிடையே வாரிசுரிமை ஏற்பட்ட பின்னர் 26 ஆண்டு காலமாக கூட்டுடமையில் அனுபவம் செய்யாமல் இருந்து, பிரதிவாதி, வாதியை புறம் தள்ளி அனுபவம் செய்து வந்திருப்பதால் வாதிக்கு எதிராக பிரதிவாதிக்கு எதிரிடை அனுபவம் ஏற்பட்டதாக **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு –** Thangavel and Others /VS/ Dhanabagyam and others – 2020 (6) CTC 181- தாக்கல் செய்தும், பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதி வழக்கில் தாவா சொத்தின் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருவதை ஒப்புக்கொண்டு இருப்பதால் வாதியின் அனுமதியின் பேரில் குடியிருந்து வருவதை நிரூபிக்க தவறியதால் பிரதிவாதி சட்டம் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மேற்பட்டு குடியிருந்து வருவதால் பிரதிவாதிக்கு எதிரிடை பாத்தியம் கிடைக்கத்தக்கது என்று பிரதிவாதிக்கு எதிராக கோரும் சுவாதீன பரிகாரம் காலம் கடந்துவிட்டது என்று வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி வாதுரை செய்தார்.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:06:44 +0530

**9(9)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் பிரதிவாதிகள் தரப்பு வாதுரைக்கு பதில் வாதுரையாக பிரதிவாதிகள் தரப்பில் வாதுரையில் கூறப்பட்டுள்ள பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் எதிரிடை அனுபவம் கோராத நிலையில் வாதி தரப்பில் பிரதிவாதிகளின் தாவா சொத்தின் அனுபவம் Permissive possession என்பதை நிரூபிக்க தவறியதால் காலவரையறை சட்டத்தின்படி காலம் கடந்துவிட்டதாக சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று **மாண்புமிகு உச்சநீதிமன்றம்** Full Bench **முன்தீர்ப்பான** – Ravinder Kaur Grewal and Others /VS/ Manjit Kaur and Others – 2019 (4) CTC 936 தாக்கல் செய்து வாதுரை செய்தார். பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கிற்கு பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் 2022ம் ஆண்டு சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வாதி தரப்பில் அசல் வழக்கு சீர்திருத்தம் செய்யப்பட்டிருப்பது காலவரையறை சட்டத்தின்படி காலம் கடந்துவிட்டது என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சீர்திருத்த மனு அனுமதிக்கப்பட்டதும் அசல் வழக்கை தாக்கல் செய்த காலமான 2009ம் ஆண்டு முதல் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரப்பட்டதாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று **மாண்புமிகு உச்சநீதிமன்றம் முன்தீர்ப்பு** – P.A. Jayalakshmi /VS/ H.Saradha and Others – 2009 (4) CTC 201 – தாக்கல் செய்தும், அவ்வாறு வழக்கு நிலுவையில் இருக்கும் காலத்தில் சீர்திருத்தம் செய்யப்படுவதால் சீர்திருத்தம் செய்யப்பட்ட தேதிக்குரிய வழக்கு சொத்து மதிப்பீட்டின்படி நீதிமன்றக்கட்டணம் செலுத்தவேண்டியதில்லை என்று **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை வழங்கிய முன்தீர்ப்பு** – S.Saibullahkhan /VS/ Hairunisha Beevi – 2016 (5) CTC 500 – தாக்கல் செய்து வாதுரை செய்து, வாதி தாவா சொத்தின் உரிமையை வா.சா.ஆ.1, பி.சா.ஆ.1ன்படி ஆவணம் மூலமாகவும், பி.சா.1 முதல் விசாரணையில் பாரா 3, 4ல் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தாவா சொத்தின் உரிமை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டு பி.சா.ஆ.5 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் இந்திய சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:06:49 +0530

54 ன் கீழ் அசையா சொத்தை பொறுத்து பதிவு சட்டம் 1908 பிரிவு 17 ன்படி பதிவு செய்யப்படாததால் உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டிருந்தாலும், Remained inadmissible ஆவணமாக இருந்து வருவதால் பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.5 ல் உள்ள Attesting witness ஐ விசாரணை செய்து Due execution ஐ நிரூபிக்கப்படாததால் பி.சா.ஆ.5 ன் அடிப்படையில் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமை கோரப்பட்டிருப்பதால் அதற்கு எதிராக எதிரிடை அனுபவம் எதிர்வழக்குரையில் கோராமல் சித்தித்திருப்பதாக வாதுரையில் கோருவது நிலையான சட்ட விதிக்கு முரணானது என்பதால் வாதி வழக்கில் கோரும் சுவாதீன மீட்பு பரிகாரம் காலவரையறை சட்டத்தால் கடந்து போகவில்லை என்பதால் வழக்கை அனுமதிக்க கோரியுள்ளார்.

9(10) மேற்படி இருதரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் வாதுரையை பரிசீலனை செய்ததில் தாவா சொத்து வாதியின் வளர்ப்பு தந்தை பூச்சன் குமாரர் வேதமுத்துக்கு பாத்தியப்பட்டிருப்பதும், அவரது ஆயுட்காலத்திலேயே வா.சா.ஆ.1, பி.சா.ஆ.1 வாதிக்கு உயில் ஆவணம் பதிவு செய்து கொடுத்திருப்பதும், வா.சா.ஆ.2, பி.சா.ஆ.10 ன்படி 1994 ம் ஆண்டு காலம் சென்ற பின்னர் உயில் நடைமுறைக்கு வரப்பட்டுள்ளது என்பது வாதி, பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். தாவா சொத்து வேதமுத்து காலத்திலேயே பிரஸ்மட்டம் போடப்பட்டிருந்தது என்பது வாதி, பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேற்படி சங்கதிகளை 3 ம்பிரதிவாதி அவரது முதல்விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3, 4 ல் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் முதல்விசாணையில் ஒப்புக்கொண்டது Defendant admitted existence of Family Arrangement in his Chief examination – Admission is best evidence. வாதி தனது நெருங்கிய உறவினரான 2 ம்பிரதிவாதி, வாதியின் அறியாமையை பயன்படுத்தி பாதுகாப்பாகவும், பராமரிப்பதற்காகவும் அசல் உயில் ஆவணத்தை பெற்றுக்கொண்டு மோசடியாக

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:06:55 +0530

ஆவணம் உற்பத்தி செய்துள்ளதாக கூறியுள்ளார். 3ம்பிரதிவாதிக்கு, வாதி தனது கணவரை இழந்து பெற்றோரை இழந்திருப்பதால் நிதி நெருக்கடியால் தாவா சொத்தை ரூ.36,000/-ற்கு 1996ம் ஆண்டு பி.சா.ஆ.5ன் அடிப்படையில் பதிவு செய்யப்படாத ஆவணம் சாட்சிகள் முன்புக்கு எழுதிக்கொடுத்து அனுபவத்தை ஒப்படைத்து, அசல் உயில் ஆவணத்தை ஒப்படைத்துவிட்டதாகவும், அது முதல் தாவா சொத்தில் 3ம்பிரதிவாதி வீடு கட்டி தீர்வை ரசீது, மின்இணைப்பு, தண்ணீர் இணைப்பு பெற்று குடியிருந்து வருவதாகவும், வாதியின் தாவா சொத்தின் உரிமையை மறுத்துரைத்துள்ளார். 3ம்பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து உரிமை கோரும் ஆவணமான பி.சா.ஆ.5 ரூ.36,000/- தொகைக்காக எழுதப்பட்ட ஆவணமாகும். As per Section 54 of the Transfer of Property Act, the sale should be made in case of tangible immovable property of the value of one hundred rupees and upwards, or in the case of a reversion or other intangible thing, can be made only by a registered instrument. In the case of tangible immovable property of a value less than one hundred rupees, such transfer may be made either by a registered instrument or by delivery of the property. In this case, the document dated 26.11.1996 is More than Rs.100/-. However once the sale transfer made through an instrument, it should be through registered instrument. But Ex.B5 /Sale deed is an unregistered sale deed. Therefore, the said document cannot be relied upon and no transfer was effected through that deed. Hon’ble Chennai Division Bench held that the transaction of sale if in writing, even if it is for a value of less than Rs.100/-, has to be registered and thereby the alleged instrument is not admissible in evidence as a transaction affecting any immovable property comprised therein. இந்த வழக்கின் பொருண்மை தாவா சொத்தின் மதிப்பு 26.11.1996 அன்று ரூ.36,000/-ஆக பிரதிவாதி மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதால் சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 54ன் படியும், பதிவு சட்டம் 1908 பிரிவு 17ன் கீழ் கட்டாய பதிவுக்கு அசையா சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட வேண்டும்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:03 +0530

என்றும் பி.சா.ஆ.5 வழக்கு நிலுவையில் இருக்கும்போது முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டிருந்தாலும் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் இல்லை என்று வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்தீர்ப்பு **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் – Thangamuthu /VS/ A.Jeyaraj 2020 (1) CTC 47**

> **Registration Act, 1908 (16 of 1908) Section 17 – Indian Stamp Act, 1899 (2 of 1899) Section 35 –** Unregistered and insufficiently stamped Sale Deed – Whether curable defect – Admissibility in evidence – Failure to object – Effect of – Held, document, compulsorily registrable under Registration Act, cannot be admitted in evidence, unless it is registered – Document, inherently bad for non-registration, cannot be cured by paying deficit Stamp Duty and Penalty – Such documents cannot be looked into even for collateral purposes.

**9(11)** மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பி.சா.ஆ.5 ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்படாத ஆவணம் என்பதாலும், பதிவு செய்யப்படாத ஆவணத்தை சாட்சிகள் முன்புக்கு எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டிருப்பதால் பி.சா.ஆ.5 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள Attesting Witness யாரையும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அதற்கு ஆதரவாக வாதி தரப்பில் தாக்கல் செய்த **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் – Subramanian /VS/ Selvaraj (Died) on 9 March 2026**

> Firstly, the unregistered Sale Deed will not convey any title to the plaintiff regarding suit properties. A perusal of the Ex.A1-unregistered Sale Deed would indicate that the consideration for the suit properties was mentioned as Rs.16,500/-. Therefore, it is clear that at the relevant point of time, the suit properties were worth about more than Rs.100/-. Therefore, any conveyance of the same shall be only by way of registered

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:10 +0530

document. In such circumstances, Ex.A1-unregistered Sale Deed relied on by the plaintiff will not help him to prove his title over the suit properties.

The defendant-Selvaraj specifically denied the execution of Ex.A1-Unregistered Sale Deed. In order to prove Ex.A1-unregistered Sale Deed, the plaintiff has not examined any attestor to the document. The plaintiff only examined one Mani, who is said to be the Scribe of the said document. If the Sale Deed is a registered one, then it need not be proved by calling an Attestor. In the case on hand, the Sale Deed is unregistered one. In such circumstances, in order to prove the execution of unregistered Sale Deed, the plaintiff should have examined the Attestor to prove the due execution. In the absence of evidence of Attestor to the document, based on interested testimony of PW.1 and the evidence of Scribe alone, we cannot come to the conclusion that the due execution of Ex.A1 was proved. Even assuming that the due execution of Ex.A1 was proved, the unregistered document will not convey any title to the plaintiff.

Admittedly, the defendant is the owner of the properties. When it is held that Ex.A1-unregistered Sale Deed will not convey any title to the plaintiff, as a owner of the properties the defendant is entitled to recovery of possession from the plaintiff. Therefore, both the Courts below are justified in declaring title of the defendant and ordering recovery of possession. As a real owner of the properties, the defendant is also entitled to custody of the title documents. Therefore, the defendant is also entitled to recovery of title

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:16 +0530

**9(12)** மேற்படி முன்தீர்ப்பை பரிசீலனை செய்து தாவா வழக்கில் பி.சா.ஆ.5 பதிவு செய்யப்படாத ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள நபர்களை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யவில்லை. பி.சா.ஆ.5 பதிவு செய்யப்படாத ஆவணத்தினை Due execution ஐ பிரதிவாதிகள் தரப்பில் நிருபிக்க தவறியுள்ளதாக மேற்படி முன்தீர்ப்பில் தெரிய வருகிறது. மேற்படி பி.சா.ஆ.5 ன் அடிப்படையில் தாவா சொத்திற்கு 3 ம்பிரதிவாதி பெயரில் தீர்வை ரசீது, மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு ஏற்பட்டிருப்பதாக கூறுவது அடிப்படை ஆவணமான பி.சா.ஆ.5 சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதால் அதன் அடிப்படையில் ஏற்பட்ட பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பது **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முன்தீர்ப்பு – M.Baskar /VS/ Special Secretary CMDA – (2026) 1 MLJ 1043 -**

> Legal Maxims – 'sublato fundamento cadit opus' – When the foundation is removed, the structure falls – The principle that this maxim informs us is that if the initial basis for a legal proceeding is declared invalid, then all the subsequent actions and proceedings arising there from are equally invalid – This maxim ensures the propagation of procedural fairness and substantial justice, by preventing unlawful foundations.

**9(13)** மேற்படி முன்தீர்ப்பின் படி பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.5 ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் இல்லை. Under Order 13, Rule 3 of CPC, there is ample provision for a court to reject irrelevant or inadmissible documents. The rule is extracted hereunder for easy reference and appreciation.

"3. Rejection of irrelevant or inadmissible documents – The court may at any stage of the Suit reject any document which it considers irrelevant or otherwise inadmissible, recording the grounds of such rejection".

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:23 +0530

Therefore, the mere fact that the documents have been assigned an exhibit number, it is not an embargo for the court to reject the same as being inadmissible ஆவணம் என்பதால் அதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.4 ஆவணங்கள் Invalid ஆவணங்கள் என்று முடிவு செய்யப்பட்டு பி.சா.1 குறுக்குவிசாரணையில் உயில் ஆவணத்தை பொறுத்து நீங்கள் வீடு கட்டி துணையாக இருந்து கொள்ளுங்கள் என்று கொடுத்தார்கள் வாதிக்கு கணவரும் இல்லை அவரது பெற்றோரும் இல்லை என்று சாட்சியம் அளித்திருப்பதால் வாதியின் அறியாமையை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். தாவா சொத்தில் துணையாக இருந்து கொள்வதாக கூட்டாக இருந்து வருவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தை வாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் எதிரிடை பாத்தியம் எதிர்வழக்குரையில் கோரப்படாததால் அதற்கு ஆதரவாக தாக்கல் செய்த **மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பு – Nazir Mohammed /VS/ J.Kamala and Others 2020 (6) CTC 320**

> <u>Property Law – Limitation Act, 1963, (36 of 1963), Article 65 – Code of Civil Procedure, 1908 (5 of 1908), Order 7 – Evidence Act, 1872 (1 of 1872), Sections 101 to 103 –</u> Recovery of Possession, when permissible – Plaintiff pleaded Defendant;s original possession was permissive Defendant denied title and ownership – Burden lies on Plaintiff to prove tenancy of Defendant – On failure to establish such tenancy, Adverse Possession may be presumed – First Appellate Court confirmed findings of Plaintiff's ownership and title by denied recovery of possession as barred by limitation – High Colurt in Second Appeal granted recovery of possession – Held, Decree of Possession does not automatically follow Decree declaring title and ownership over property – Person seeking possession must establish: (i) entitlement to such possession; (ii) claim not barred by limitation; and (iii)

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:07:29 +0530

he had possession before alleged trespasser got possession – High Court erred in allowing possession to Plaintiff on ground that Defendant has not pleaded and proved Adverse Possession – Settled principle is that Plaintiff's claim to reliefs must be decided on strength of Plaintiff's case and not on weakness of Defendant's case – Plaintiff ought to have pleaded date when Defendant or his predecessor-in-interest took possession – Presumption that possession deemed to follow title applicable only when there is no definite proof of possession by anyone else.

9(14) பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேற்படி முன்தீர்ப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று வாதி தரப்பில் **மாண்புமிகு உச்சநீதிமன்றம்** 3 நீதியரசர்கள் அடங்கிய அமர்வு பிறப்பித்த முன்தீர்ப்பு **Ravinder Kaur Grewal and Others /VS/ Manjit Kaur and Others 2019 (4) CTC 936**

Doctrine of Adverse Possession - Title acquired by Adverse Possession - Possession by Trespasser – Distinction – Right to sue for Declaration of Title and Recovery of Possession - Right ripened by prescription by Adverse Possession is absolute – Possession as trespasser is not adverse nor long possession is synonym with Adverse Possession - Right to recover possession based on title is absolute irrespective of limitation in absence of Adverse Possession by Defendant - Expression "Title" employed in Article 65 of Limitation Act would include title acquired by Plaintiff by way of Adverse Possession.

**<u>Doctrine of Adverse Possession -</u>** Requirements to invoke Adverse Possession: (a) nec vi - adequate in continuity, (b) nec clam - adequate in publicity, (c) nec precario - adverse to competitor, in denial of title with his knowledge - Entitlement to claim benefit of Adverse Possession - Adverse Possession cannot be decreed on title which is not pleaded - Animus

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:36 +0530

possidendi under hostile colour of title is required - Trespasser's long possession is not synonym with Adverse Possession - Owner can take possession from trespasser at any point in time.

The adverse possession requires all the three classic requirements to co-exist at the same time, namely, nec vi i.e. adequate in continuity, nec clam i.e., adequate in publicity and nec precario i.e. adverse to a competitor, in denial of title and his knowledge. Visible, notorious and peaceful so that if the owner does not take care to know notorious facts, knowledge is attributed to him on the basis that but for due diligence he would have known it. Adverse possession cannot be decreed on a title which is not pleaded. Animus possidendi under hostile colour of title is required. Trespasser’s long possession is not synonym with adverse possession. Trespasser’s possession is construed to be on behalf of the owner, the casual user does not constitute adverse possession. The owner can take possession from a trespasser at any point in time. Possessor looks after the property, protects it and in case of agricultural property by and the large concept is that actual tiller should own the land who works by dint of his hard labour and makes the land cultivable. The legislature in various States confers rights based on possession.

**9(15)** மேற்படி இரண்டு முன்தீர்ப்புகளையும் பரிசீலனை செய்ததில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட முன்தீர்ப்பில் உச்சநீதிமன்றத்தில் 3 நீதியரசர்கள் அமர்வு வழங்கிய தீர்ப்பை இந்த நீதிமன்றம் கருத்தில் கொண்டு பிரதிவாதி தரப்பில் எதிரிடை அனுபவம் எதிர்வழக்குரையில் கோராமல் எதிரிடை அனுபவம் ஏற்பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முன்வைத்த வாதம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று முடிவு செய்து, பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் எதிரிடை அனுபவம் கோரப்படாததால் வாதி தாக்கல் செய்த

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:43 +0530

வழக்கு தாவா சொத்தின் உரிமை ஆவணமாக வா.சா.ஆ.1ன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு காலவரையறை சட்டத்தின்படி தடைபடவில்லை என்று முடிவு செய்து வாதி தாவா சொத்தின் உரிமையை பிரதிவாதி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் உரிமை ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதாக முடிவு செய்து வாதி வழக்கில் கோரும் தாவா சொத்தைபொறுத்து கோரும் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று 1வது எழுவினா மற்றும் 1வது கூடுதல் எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>10) 3 வது எழுவினாவிற்கான தீர்வு–</u>

தபசில் சொத்தை வாதி 26.11.1996ம் தேதி 1ம்பிரதிவாதியின் கணவரும், 2ம்பிரதிவாதியின் மகனுமான ரவிச்சந்திரன் என்பவருக்கு ரூ.36,000/–க்கு கிரையம் பேசி சாட்சிகள் முன்பு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், தபசில் சொத்தை பொறுத்து ரவிச்சந்திரன் பெயரில் தீர்வை செலுத்தியும், ரவிச்சந்திரன் 1996ம் வருடம் முதல் இன்று வரை அனுபவித்து வருவதால் ரவிச்சந்திரன் இந்த வழக்கிற்கு அவசிய கட்சி ஆவார். மேற்படி ரவிச்சந்திரனை அவசிய கட்சிக்காரராக சேர்க்கப்படவில்லை என்று 1ம்பிரதிவாதி எதிர்வழக்குரையில் எடுத்துரைத்துள்ளார். அசல் வழக்கு விசாரணையில் இருந்து வந்த போது ரவிச்சந்திரன் என்பவர் இ.ம.எண்.178/2012 மனு 02.04.2012ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளதால் அவசிய கட்சியை சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிக்கப்படவில்லை என்று 3வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>11) 4 வது எழுவினாக்கான தீர்வு–</u>

1, 3 எழுவினாக்கள் மற்றும் 1வது கூடுதல் எழுவினா வாதிக்கு சாதகமாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 4 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:07:49 +0530

**12) இறுதியாக,** தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், தபசில் சொத்தை பிரதிவாதிகள் தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் காலி செய்து வாதி வசம் சுவாதீனம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று இவ்வழக்கானது அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் எழுதி விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 05.06.2026 இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:07:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சி –</u>**

வா.சா.1 – மரிய அந்தோணியம்மாள்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் –</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 27.08.1991 ம் தேதி வேதமுத்து வாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தின் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.2 | 30.07.1994 ம் தேதி வேதமுத்து அவர்களின் இறப்பு சான்றிதழ் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்–</u>**

பி.சா.1 – ரவிச்சந்திரன்

பி.சா.2– சுந்தரராஜ்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | |
|---|---|
| பி.சா.ஆ.1 | வாதியின் வளர்ப்பு தந்தை வேதமுத்து பிராது தபசில் சொத்தை வாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் அசல் |
| பி.சா.ஆ.2 | பிராது தபசில் சொத்திற்கு 3 ம்பிரதிவாதி பெயரில் கடந்த 2009 ம் வருடம் முதல் நடப்பு ஆண்டு வரை செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் எண்ணம் 9 |
| பி.சா.ஆ.3 | பிராது தபசில் சொத்திற்கு 3 ம்பிரதிவாதி பெயரில் மின்இணைப்பு எண்.073140131233 ஆக மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகள் எண்ணம் 13 |

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.06.05 16:08:04 +0530

| | |
|---|---|
| பி.சா.ஆ.4 | 3ம்பிரதிவாதி பெயரில் வழக்கிடை சொத்தில் குடிநீர் இணைப்பு பெற்றதற்கான ரசீது எண்ணம் 2 |
| பி.சா.ஆ.5 | வாதி கடந்த 26.11.1996ம் தேதியிட்டு தபசில் சொத்தை 3ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பதிவு செய்யப்படாத உரிய முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்ட கிரைய ஆவணம் அசல் 2 தாள்கள் |
| பி.சா.ஆ.6 | வாதி தரப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிராது சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.7 | வாதி தரப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் நியமனம் கோரிய மனு மட்டும் சொத்து விவரத்தை காண்பிப்பதற்காக சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.8 | வாதி தரப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி மனு சொத்து விவரம் காண்பிப்பதற்காக சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.9 | பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.10 | வேதமுத்துவின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |

**<u>நீதிமன்ற சாட்சி–</u>**

நீ.ம.சா.1 – வி.காமேஷ்வரன் (நகராட்சி வரிவிதிப்பு வருவாய் ஆய்வாளர், கோவில்பட்டி)

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் –</u>**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம், சர்வேயர் வரைபடம் |
| நீ.ம.சா.ஆ.2 | நகராட்சி ஆணையாளர் 27.02.2026ம் தேதியிட்டு ந.க.எண்.1034/2026/ஆ1 கடிதம் |
| நீ.ம.சா.ஆ.3 | 27.03.2026ம் தேதியிட்டு ந.க.எண்.1012/2026/31 என்ற கடிதத்துடன் 7 பக்கங்கள் அடங்கிய ஆவணம் சான்றொப்பமிட்டது |

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.06.05 16:08:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
கோவில்பட்டி,
அ.வ.எண்.169/2009
[CNR No.TNTT06-000040-2009]
வரைவு/நேரிய/தீர்ப்புரை
நாள்-05.06.2026